6 திருநெல்வேலி–குமரி முனை.
7 சேலம்–திருச்சிராப்பள்ளி லயன்.
8 மானமதுரை–தூத்துக்குடி லயன்.
9 தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை லயன்.
10 காஞ்சீவரம்–வேலூர் லயன்.
11 சத்யமங்கலம்–சாம்ராஜ் நகர்.
12 தெல்லிச்சேரி–மைசூர் லயன்.
13 கொல்லங்கோடு–திருச்சூர்."

SRI A. SUBRAMANYAM :—" மொரப்பூரிலிருந்து கிருஷ்ணகிரி மார்க்கம் ஹோசூருக்குப் போடும்படியான லைன் திட்டத்தை இந்த ஐந்து வருஷத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறதா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" நான் இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எந்தெந்த ரயில் பாதைகளைப் போடவேண்டு மென்று சிபார்சு செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அவற்றில் மூன்றாவது வருஷ திட்டமாக சேலம்-பங்களூர் லைன் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய கோரிக்கையும் இணைக்கப்பட்டிருக்கிறதென்று நான் நினைக்கிறேன்."

SRI M. ETHIRAJULU :—" ஐந்து வருஷத் திட்டத்தில் கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் ரயில் பாதை போடப்படும் உத்தேசம் இருக்கிறதா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அம்மாதிரி உத்தேசம் எதுவும் இல்லை."

STARRED QUESTIONS.

Collections under the National Plan Loan from the South Arcot district.

* 209 *Q.*—SRI M. ETHIRAJULU : Will the Hon. the Minister for Finance and Education be pleased to state the total amount collected under the National Plan Loan from South Arcot district during the years 1952–53 and 1953–54?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The term ' National Plan Loan ' applies to the loan raised by the Government of India during the current year. Apparently the hon. Member has in mind the loans raised by the State Government during the years 1952–53 and 1953–54. If so, the figures are—

	Total subscriptions in the South Arcot district. RS. (IN LAKHS.)
4 per cent Madras Government Loan, 1964, issued in 1952–53	2·77
4 per cent Madras Government Loan, 1963, issued in 1953–54	5·73 "

SRI V. V. RAMASWAMI :—" இந்தச் சர்க்காருக்கு அடுத்த ஆண்டில் கடன் எழுப்புவதற்கு யோசனை உண்டா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" தனித் தனியாக கடன் எழுப்புவதா அல்லது இந்த வருஷம் போலவே மத்திய அரசாங்கத் தின் மூலமே கடன் எழுப்புவதா என்கிற யோசனை இன்னும் முடிவு செய்யப்படவில்லை."